


19. 08. 2025

தலைப்பு செய்திகள்

- தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசு துணைதலைவர் வேட்பாளர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனை ஒருமனதாக தேர்ந்தெடுக்க எதிர்கட்சிகள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று, பிரதமர் திரு.நரேந்திரமோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

- I.N.D.I கூட்டணியின் குடியரசு துணை தலைவர் வேட்பாளராக உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி அறிவிக்கப்பட்டுள்ளார்.

- முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் “காக்கும் கரங்கள்” திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

- ஒகேனக்கல் காவிரியாறு மற்றும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து பெருமளவு அதிகரித்துள்ளது.

- அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் ரோஹன் போபன்னா, மொனாக்கோவின் Arneodo இணை முன்னேறியது.

இனி விரிவான செய்திகள்

*********

சி.பி.ராதாகிருஷ்ணன்

குடியரசு துணைதலைவர் வேட்பாளர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனை ஒருமனதாக தேர்ந்தெடுக்க எதிர்கட்சிகள் உட்பட அனைத்து அரசியல்

கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று, பிரதமர் திரு.நரேந்திரமோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனை அறிமுகம் செய்துவைத்ததோடு அவருடைய நீண்டகால பொது வாழ்க்கையையும், அவரது சேவைகளையும் பிரதமர் எடுத்துரைத்தார்.

நாடாளுமன்ற குழு கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு, பிரதமர் அனைத்து அரசியல் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை கோரியதாக எடுத்துரைத்தார்.

*********

I.N.D.I கூட்டணி

இதனிடையே I.N.D.I கூட்டணி சார்பாக குடியரசு துணை தலைவர் வேட்பாளராக உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு.சுதர்சன் ரெட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதுதில்லியில் காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டது.

*********

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சனைகளில் எதிர்கட்சிகள் இன்றும் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், அரசியல் சாசனத்தின் 8ஆவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளிலும் உறுப்பினர்கள் அலுவல் நடவடிக்கைகளை தெரிந்துகொள்வதற்கான மொழிபெயர்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பீஹார் வாக்காளர் பிரச்சனையில் எதிர்கட்சிகள் முழக்கம் எழுப்பியதால் நிலவிய அமளி காரணமாக மக்களவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டன.

இதேபிரச்சனையில் மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் இவ்விவகாரத்தில் 3ஆவது நாளாக பாதையாத்திரை மேற்கொண்டுள்ள திரு.ராகுல் காந்திக்கு எதிராக பீஹார் மாநிலம் நவாடா மாவட்டத்தில் பிஜேபியினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

*********

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று ரஷ்யா புறப்படுகிறார்.

இந்தியா - ரஷ்யா நாடுகள் இடையிலான 26ஆவது ஆணைய பேச்சுவார்த்தைகளில் நாளை மாஸ்கோவில் அமைச்சர் பங்கேற்கிறார்.

வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம், கலாச்சார ஒத்துழைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் இதில் முக்கியமாக இடம்பெறுகின்றன.

இந்த பயணத்தின் ஒருபகுதியாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் Sergey Lavrov-உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இந்தியா - ரஷ்யா வர்த்தக கூட்டமைப்பு மாநாட்டிலும் உரையாற்றுகிறார்.

தொடர்ந்து சர்வதேச பிராந்திய பிரச்சனைகளில் பரஸ்பரம் நலன் சார்ந்த விஷயங்களை இருதலைவர்களும் ஆராய்கின்றனர்.

திரு.ஜெய்சங்கரின் பயணம் இந்தியா – ரஷ்யா இடையிலான அரசியல் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*********

அஜித்தோவல்

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித்தோவல் மற்றும் சீன வெளியுறவு அமைச்சர் திரு.Wang Yi இடையிலான 24ஆவது சிறப்பு பிரதிநிதி நிலையிலான பேச்சுவார்த்தை புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

இதில் உரையாற்றிய திரு.தோவல் இரு நாடுகளுக்கிடையிலான எல்லை நிலைமை, கடந்த 9 மாதங்களில் மேம்பட்டுள்ளதாகவும், அமைதியான நிலை நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை புதிய பாதையில் கொண்டு செல்வதற்காக கடந்த அக்டோபர் மாதம் இருநாட்டு தலைவர்களும் கஸானில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளுக்கு அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

24ஆவது பிரதிநிதிநிலையிலான பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர் இருநாடுகளிடையே ஒத்துழைப்புக்கான புதிய சூழல் வலுப்பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி விரைவில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா செல்ல உள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தைகள் முக்கியத்துவம் பெறுவதாகவும் திரு.அஜித்தோவல் குறிப்பிட்டார்.

இந்த கூட்டத்தில் பேசி சீன வெளியுறவு அமைச்சர் திரு.Wang Yi இரு நாடுகளுக்கிடையே எல்லை பிரச்சனை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டதாகவும், சென்ற ஆண்டு நடைபெற்ற 23ஆவது பிரதிநிதி நிலையிலான பேச்சுவார்த்தைகள் அக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டார்.

இந்தியா சீனா இருதரப்பு உறவு வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் புதிய வாய்ப்புகள் உருவாகி உள்ளதாகவும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள சீன வெளியுறவு அமைச்சர் இன்று பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் சந்தித்து பேசுகிறார்.

*********

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வளர்ச்சி அடைந்த பாரதம் வேளாண் உத்திரவாத பிரச்சார இயக்கம் வரும் அக்டோபர் 3 ஆம் தேதி தொடங்கப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர், இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் இடையிலான நேரடி கலந்துரையாடல் வரும் அக்டோபர் 18ஆம் தேதிவரை நடைபெறும் என்று குறிப்பிட்டார்.

ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளும், வேளாண் அலுவலர்களும் கிராமங்களுக்கு சென்று விவசாயிகளிடையே உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைப்பார்கள் என்றார்.

கடந்த மே மாதத்தில் வேளாண் பிரச்சாரத்தின் போது ஒருகோடியே 33 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளிடம் அறிவியல் விஞ்ஞானிகள் கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

விவசாய பண்ணை தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான வேளாண் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாகவும் திரு.சவ்ஹான் எடுத்துரைத்தார்.

*********

முதலமைச்சர்

முன்னாள் படைவீரர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் “காக்கும் கரங்கள்” புதிய திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

தொழில் தொடங்குவதற்கான ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் நெடுஞ்சாலை, பொதுப்பணி துறைகளின் சார்பில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 214 பேருக்கும்,

கருணை அடிப்படையில் 33 பேருக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

*********

ஆளுநர்

வேலூர் மாவட்டம் சேற்காடில் அமைந்துள்ள திருவள்ளுவர் பல்கலைகழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது.

தமிழக ஆளுநரும் பல்கலைகழக வேந்தருமான திரு.ஆர்.என்.ரவி இதில் பங்கேற்று 256 மாணாக்கருக்கு நேரடியாக பட்டங்களை வழங்கினார்.

25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் இன்று பட்டங்களை பெறுகின்றனர்.

*********

பெரியகருப்பன்

தமிழக வேளாண்மை துறையில் பல புதிய தொழில்நுட்பங்கள் கையாளப்படுவதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில், உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், வேளாண் உற்பத்தி பொருட்களை மதிப்பு கூட்டும் பொருளாக மாற்றும் யுக்திகளை விவசாயிகள் அறிந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை விவசாயிகள் பின்பற்றி சாதனை படைக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

*********

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஒகேனக்கல் காவிரியாற்றில், நீர்வரத்து, நண்பகல் நிலவரப்படி, ஒரு லட்சத்து 25 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது தர்மபுரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

- வாய்ஸ் - -

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தற்போது வினாடிக்கு 87 ஆயிரத்து 805 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து 50 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 117.45 அடியாக உள்ளது.

*********

பவானிசாகர் வாய்ஸ்:

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து, 7 ஆயிரத்து 400 கன அடி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருவதால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

- - வாய்ஸ் - -

_ *********

புயல் - கூண்டு

நாகை துறைமுகத்தில் இரண்டாவது நாளாக ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ள நிலையில், கடல்காற்று அதிகமாக இருப்பதால், மீனவர்கள் கரை திரும்பிய வண்ணம் உள்ளனர்.

இருப்பினும் இலங்கை காங்கேசன் துறை – நாகை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெறுவதாக எமது நாகை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*********

கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய கடல்சார் ஆய்வுமையம் மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரை உள்ள கடல் பகுதிகளில் 2 மீட்டர் உயரத்திற்கு ராட்சத அலைகள் உருவாக கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சுற்றுலா பயணிகள் கடலில் இறங்க வேண்டாம் எனவும், மீனவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*********

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் யூரியா உரத்தை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி எச்சரித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வங்கிகள் மூலமான உயர்கல்வி கடனுதவிகளை மாணாக்கர் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் அறிவுறுத்தினார்.

தூத்துக்குடி மாவட்டம் மச்சாது பால உப்பள ஓடை பகுதி வழியாக இலங்கைக்கு கடத்தவிருந்த 50 லட்ச ரூபாய் பெருமான ஆயிரத்து 500 கிலோ புகையிலை பொருட்களை கடலோர பாதுகாப்பு குழும காவல்துறையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

*********

கோவில்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ரோப்கார் சேவை நாளைமுதல் மீண்டும் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

*********

டென்னிஸ்

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் ரோஹன் போபன்னா, மொனாக்கோவின் Arneodo இணை முன்னேறியது.

முதல் சுற்றில் போபன்னா இணை, இத்தாலி, ஃபிரான்ஸ் இணையை 6-1 6-1 என்ற நேர் செட்களில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது